**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு மாரச் மாதம் 09 ம் நாள் திங்கட்கிழமை

**இ.ஏ.எண்.1/2026 அதன் இ.பி.எண்.32/2025**

**அதன் சி.சி.எண்.13/2018**

முருகையா .... மனுதாரர்/3 ம் எதிர்மனுதாரர்/ தீர்ப்பு கடனாளி

/எதிர்/

ஸ்ரீராம் சிட்ஸ் இந்தியா (பி)லிமிடெட்,
அதன் போர்மென் மூலம்,
திருநெல்வேலி சிட்டி .... எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர்

இந்த மனுவானது 19.02.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பாவநாசம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினர்களின் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106 மற்றும் பிரிவு 151–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) மனுதாரர் நிறைவேறுதல் மனுவில் 3 ம் எதிர்மனுதாரர் என்றும், நிறைவேற்றுதல் மனுவில் கடந்த 26.11.2025 ம் தேதியில் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி தினத்தில் மனுதாரருக்கு

தீராத காய்ச்சல் ஏற்பட்டதாலும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் வழக்கறிஞரை சந்தித்து, மேற்படி தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதனால், மேற்படி 26.11.2025ம் தேதி மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், என்றும், எனவே, மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டியது அவசியமானது என்றும், இல்லாவிட்டால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என்றும் கூறி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. இம்மனுவினை செலவு தொகையுடன் அனுமதிப்பதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு நிறைவேற்றுதல் மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

5) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியத்தையோ அல்லது சான்றாவணத்தையோ முன்னிடப்படவில்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் 3ம் எதிர்மனுதாரர் ஆவார். எதிர்மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர் ஆவார். மனு தொகையை வசூல் செய்யும் பொருட்டு 2, 3, 4 எதிர்மனுதாரர்களின் சம்பளத்தினை 5ம் எதிர்மனுதாரர் பிடித்தம் செய்து மனுதாரருக்கு செலுத்தக் கோரி நிறைவேற்றுகை மனுவை எதிர்மனுதாரர் / மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் எதிர்மனுதாரர்/நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர் சி.சி.எண்.13/2018 தாக்கல் செய்து, மேற்படி வழக்கு

கடந்த 11.06.2024 ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நிறைவேற்றுகை மனுவை இம்மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, அது இந்நீதிமன்றத்தால் நி.ம.எண்.32/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

8). மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்/ 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் நிறைவேற்றுகை மனுவில் எதிருரை தாக்கல் செய்வதற்காக 26.11.2026 ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மனுதாரருக்கு தீராத காய்ச்சல் ஏற்பட்டதால் அவரது வழக்கறிஞரை சந்தித்து, நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதனால், மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவை கடந்த 26.11.2025 ம் தேதி பிறப்பித்துள்ளது என்றும், அதன் பின்னர் மனுதாரர் தரப்பில் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கடந்த 12.01.2026 ம் தேதி தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

9) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு பிரதான நிறைவேற்றுதல் மனுவில் உள்ள சங்கதிகளை மறுத்து கட்சி செய்ய ஒரு வாய்ப்பு வழங்கும் வகையிலும், மனுதாரர் இம்மனுவுடன் எதிருரை தாக்கல் செய்துள்ள நிலையிலும், எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை செலவு தொகையுடன் அனுமதிப்பதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை என கூறியுள்ள நிலையிலும், நீதியின் நலன் கருதியும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவை செலவு தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு சிறந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுவின் செலவு தொகையாக ரூ.3000/-ஐ மனுதாரர், எதிர்மனுதாரருக்கு 13.03.2026 க்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு**

**அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 13.03.2026.**

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

orders uploaded on 09.03.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.09 18:56:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

__1). மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்__ – இல்லை
__2). எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்__ – இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

orders uploaded on 09.03.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.09 18:56:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ. திருநெல்வேலி
இ.ஏ.எண்.1/2026
இன்
இ.பி.எண்.32/2025
இன்
சி.சி.எண்.13/2018
நாள்– 09.03.2026
வரைவு/நேரிய உத்தரவு